செம்மண்

நிலம் 3 துகள் 160 வள்ளுவர் ஆண்டு 2052, 12 - 18 ஆவணி 2023 வாரமலர் பக்கங்கள் 21

# மாணவர்களைத் தண்டிப்பது

# சரியா? தவறா...??



**மனிதர் ஒருவருக்கு மனிதர் ஒருவர் அடிப்பது என்பது முற்றிலும் தகாத ஒன்று. அது தவிர்க்கப்பட வேண்டியதும்கூட. மற்றொரு மனிதரைத் தாக்குவது தவறானது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இது அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தும். ஆசிரியர்களை மாத்திரம் இதற்குள் அடக்கிக் குறுக்கிவிடக் கூடாது.**

ஞானி

பாடசாலை மாணவர்களை ஆசிரியர்கள் தண்டிக்கும் விவகாரம் பேசுபொருளாகப் பரவி வருகிறது. மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அடிப்பது தவறானது என்றும் மாணவர்களுக்கு அடிக்கக்கூடாது என்றும் சிறுவர் உரிமை அமைப்புகள், சிறுவர் பாதுகாப்பு அமைப்புகள், மனித உரிமைத் தரப்பினர், இலங்கைச் சட்ட ஏற்பாடுகள் எனப் பலவும் வலியுறுத்துகின்றன. " ஆசிரியர்களே உங்கள் மீது சித்திரவதைச் சட்டம் பாயும்" என்று ஆசிரியர்களை எச்சரிக்கும் அல்லது அச்சுறுத்தும் வகையில் முகநூல் உட்பட்ட சமூக வலைத் தளங்களில் கருத்திடப்படுகிறது. நீதிபதி ஒருவரின் எச்சரிக்கைகூட உலாவுகிறது. இவையெல்லாமும் மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் - கல்வி நிர்வாகப் பிரிவினர் வட்டத்தை உலுப்பி வருகின்றன. மாணவர்களுக்கு அடிக்க வேண்டிய யதார்த்த நிலை இருக்கும்போது அவ்வாறில்லை அடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்கின்றன இலங்கைச்சட்ட திட்டங்கள். இதனால் எழுந்திருப்பதே இந்தச் சிக்கல். அப்படியாயின் இந்த விடயத்துக்குத் தீர்வுதான் என்ன...? மாணவர்களைத் தண்டிப்பது தவறானதா? சரியானதா...? அடித்தே ஆக வேண் டியிருக்கிற யதார்த்தத்தைக் கடந்து செல்வதற்குரிய தீர்வாக மேற்குறித்த தரப்பினர் தீர்வெதனையாவது முன்வைக்கிறார்களா...? மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கல்,

அன்பாக வழிநடத்துதல், புத்திமதி சொல்லல், உளவியல்சார் நிபுணர்களைக் கொண்டு ஆற்றுப்படுத்தல் என இவர்கள் முன்மொழிகின்ற மாற்று மருந்துகளால் இதற்குத் தீர்வுண்டா...? இல்லையா...?


**அடிப்பது தவறு...?**

மனிதர் ஒருவருக்கு மனிதர் ஒருவர் அடிப்பது என்பது முற்றிலும் தகாத ஒன்று. அது தவிர்க்கப்படவேண்டியதும் கூட. மற்றொரு மனிதரைத் தாக்குவது தவறானது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இது அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தும். ஆசிரியர்களை மாத்திரம் இதற்குள் அடக்கிக் குறுக்கிவிடக்கூடாது. ஆசிரியர்கள் அடிப்பது எவ்வாறு தவறானதோ அதைப் போலதான் பெற்றோர்கள் அடிப்பதும் தவறானது (மேலை நாடுகளில் இதுவும் சட்டமாகிவிட்டது. சில காலங்களில் அந்த நிலை இங்கும் வரலாம்). காவல் துறையினர் அடிப்பதும் தவறு. மாணவர்களுக்கு மாணவர்கள் அடிப்பதும் தவறு. படையினர், சிப்பாய்களைக் கொண்டு மக்களுக்கு அடிப்பதும் தவறு. இவ்வாறாக ஒருவருக்கு ஒருவர் அடிப்பது எல்லாமே தவறாக இருக்கும்போது ஆசிரியர்களை மாத்திரம் வலைபோட்டுப் பிடிப்பதுதான் இங்குள்ள முரண். அத்தோடு ஒருவருக்கு ஒருவர் அடிப்பது தவறு என்பதை இறுக்கமாக நடைமுறைப்படுத்தினால் இந்தச் சிக்கல் ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஏற்பட வாய்ப்பில்லை. அனைவரும் அகப்படுவர்.

> **ஆசிரியரின் மன நிலைக் குழப்பம் காரணமாக மாணவர்கள் தாக்கப்படுவது. இதைத் தான் தவிர்த்தாக வேண்டும். தண்டனைக்குரியதும் இதுவே. இதற்காக ஆசிரியர்களை நிச்சயம் தண்டிக்க வேண்டும். ஆனால் இதிலும் அரசுக்கு உடந்தை இருக்கிறது.**

ஆசிரியர்கள் மீது இவ்வகைச் சட்டத் திணிப்பை நடைமுறைப்படுத்தும் அரசானது கல்வி அடைவு மற்றும் கல்வி இலக்குகள் குறித்து ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியர் அடித்தாலோ திட்டினாலோ மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படும் என்று முடிவெடுக்கும் மூளைத் திறனுள்ளவர்களுக்கு கல்வி அடைவுமட்டம் குறித்த அழுத்தம் பிரயோகிக்கப்படும்போது ஆசிரியர்களின் மனநிலை பாதிக்கப்படும் என்று தெரியாமல் போவது பெரு விந்தை.

**ஏன் அடிக்கிறார்கள்...?**



மேற்குறிப்பிட்டதுபோன்று ஒருவரை ஒருவர் தாக்கும் அனைவரையும் தண்டிக்கும் ஆற்றல் சட்டதிட்டத்துக்கு இல்லை ஆகையால் ஆசிரியர்கள் மாத்திரம் குறிவைக்கப்பட்டுள்ளனர். இதனால் சட்டதிட்டத்துக்கோ, அரச நிர்வாகத்துக்கோ லாபம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆசிரியர்களால் திருத்தப்படாத மாணவர்களைக் காவல்துறையினரும் நீதிமன்றங்களும் திருத்தும் வேலை எங்கோ ஓரிடத்தில் வந்தே சேரும். எனவே ஆசிரியர்களைக் குறிவைத்துத் தாக்கும் பாரபட்சமான தண்டனை அநீதியானது என்பதே உண்மை.

**அப்படியாயின் இதைத் தவிர்ப்பது எவ்வாறு?**

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அடிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அதில் ஒன்று,

மாணவர்களின் குழப்படிகள் காரணமாகத் தண்டிக்கப்படுவது.

வீட்டில் திருத்தப்படாத பிள்ளைகளே இந்த ரகத்தினர். பெற்றோரின் குழந்தை வளர்ப்பிலுள்ள குறைபாடு அவர்தம் குழந்தைகளின் ஒழுக்கம், நடத்தை, பேச்சுகள், செயல்கள் ஆகியவற்றூடாக ஆசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் இடையூறளிக்கும்போது தண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏதோ ஒரு காரணத்துக்காகச் சக மாணவனைத் தாக்கிய மாணவனுக்கு ஆசிரியர் புத்திமதி சொல்லி மற்றவர்களுக்கு அடிக்கக்கூடாது என்றுகூறி அனுப்பி வைக்கிறார் (அன்றைய நாளில் அடி வாங்கிய மாணவனின் மனநிலை விரக்தி அடையும். இதைக் கவனிப்பதற்கு மேற்குறித்த சிறுவர் பாதுகாப்புத் தரப்பினருக்கு நேரமில்லை. அது ஒருபுறம் இருக்கட்டும்) மறுநாளும் அவ்வாறு நிகழும்போது ஆசிரியர் அந்த மாணவனுக்குத் தவறுதலாகக்கூட அடித்து விடக்கூடாது. தொடர்ந்தும் ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அல்லது அந்த மாணவனுக்குப் புத்திமதி சொல்லிப் பயனில்லை என்று உணர்ந்து அவனது பெற்றோரை அழைத்து அதுகுறித்து முறையிட வேண்டும்.

(அல்லதுபோனால் மேற்குறித்த தரப்பினரின் ஆலோசனைகளைக் கடைப்பிடித்துத் தொடர்ந்து புத்திமதியும் ஆலோசனையும் வழங்கிக் கொண்டிருப்பார்). தனது செயலில் எப்போதும் சளைக்காத விக்கிரமாதித்தனைப்போல ஆசிரியர் தொடர்ந்தும் புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டிருந்ததால் காலப் போக்கில் அந்த மாணவன் சக மாணவர்களைத் தாக்காமல் திருந்தி விடுவார். இதைக் கேட்கும்போது தென்னிந்தியச் சினிமாக்களில் வில்லன்கள் அல்லது தொடர் நாடகங்களில் கொடுமைகாரியான மாமியார் - மருமகள் திருந்தியதுபோன்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டால் அதற்கு நாம் பொறுப்பில்லை. அதைவிட அந்த மாணவன் திருந்துவதற்கிடையில் அவனிடம் அடி வாங்கிப் பாதிக்கப்படுகிற மாணவர்கள் குறித்தும் நாம் அலட்டிக் கொள்ளவும் தேவையில்லை. (சக மாணவர்களுக்கு அடித்து அதில் முன்னேற்றமும் அனுபவமும் கண்ட அந்த மாணவன் அடுத்த கட்டத்துக்கு முன்னேறி ஆசிரியர் மேல் கை வைத்துவிட்டான் என்று வையுங்கள். அவர் மனம் தளராமல் அவனுக்குப் புத்திமதி சொல்ல வேண்டும். இப்படிப் பல கோணங்களில் சொல்வதற்குண்டு. அதற்கு இந்தப் பத்தி போதாமல் போகலாம்) இவ்வாறான ஒரு சம்பவமே எவ்வளவு பலவீனங்களை நமக்கு உணர்த்தும்போது வௌ;வேறு விதமான மணநிலை கொண்ட பல மாணவர்களை அணுகும்போது எவ்வளவு சம்பவங்கள் நடக்கும்...?

இவ்வாறு வழிதவறிய சமூகத்து மாணவர்களைப் புத்திமதி சொல்லி வழிப்படுத்துவது என்பது ஆசிரியர்களுக்கு எவ்வளவு நெருக்கடியைக் கொடுக்கும்...? (வீட்டில் பெற்றோரால் நன்கு வழிப்படுத்தப்படுபவர்களாக வளர்க்கப்படும் பிள்ளைகள் இதற்குள் அடங்கார்) புத்திமதியால் திருந்தக்கூடியவர்களுக்குப் புத்திமதி சொல்லித் திருத்துவதும். அவ்வாறில்லாத பட்சத்தில் அடுத்த கட்டமாகத் தண்டனைகள் வழங்குவதும் தானே அவரது செயற்பாடாக இருக்கும். சரி தொடர்ந்தும் புத்திமதிகளைச் சொல்வது, ஆலோசனைகளை வழங்குவது என்பது இந்த வழி தவறிப்போயிருக்கின்ற சமூகம் பிரசவிக்கும் பிள்ளைகளில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்துமா...?




கல்விச் செயற்பாடுகளை காலச் சக்கரத்துக்குள் அடக்கி தவணைகள், பரீட்சைகள் என மும்முரமாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பதற்கும் வெகு மெதுவாக நகரும் இந்தத் திருத்த முயற்சிக்கும் இடையில் காணப்படும் முரண் சம்பவத்துடன் தொடர்புபட்ட மாணவர்களைத் தூரப்படுத்தாதா...?

சரி இவை எல்லாவற்றையும் விடுவோம். என்னதான் வாதிட்டாலும் அடிப்பது தவறுதான் என்றே இப்போதும் வைப்போம் (கவனிக்க தாய் தந்தையரால் நற்குணத்துடன் வளர்க்கப்படும் பிள்ளைகள் இதற்குள் அடங்கார் - அவர்களுக்கு ஆசிரியர்கள் அடிக்க வேண்டிய தேவையும் உண்டாகப் போவதில்லை. சம்பவத்துக்குள் அந்தப் பிள்ளைகள் வரவும் வாய்ப் பில்லை) எவ்வாறு குழப்படி செய்தாலும் பரவாயில்லை ஆசிரியர்கள் அடிக்கக் கூடாது அவர்களுக்கு அறிவுரை சொன்னால் போதும் என்று சட்டத்தைக் கொண்டுவருவோம்.

நிலமை எவ்வாறிருக்கும்....?

பாடசாலை தலைகீழாகும்.

பிள்ளைகள் - பிள்ளைகள் மோதல் அதிகரிக்கும்.

பிள்ளைகள் - பெற்றோர் மோதல் தோன்றும். அதனால்

ஊர்ச் சண்டை, சாதிச் சண்டை, மதச் சண்டைகூட ஏற்படும். ஆக, ஆசிரியர்களுக்கு வேலை ஒன்று குறையுமே தவிர நஷ்டம் எதுவும் ஏற்படுவதாகத் தெரியவில்லை.
இரண்டாவது,
கல்வி அடைவு போதாது என்று மாணவர்கள் தண்டிக்கப்படுவது.
கல்வி அடைவு குறித்த அழுத்தம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத விடத்து இதுவும் தவிர்க்கப்படும். கல்வி அடைவுகள் குறித்த அழுத்தங்களையும் வழங்கிக் கொண்டு மறுபுறம் அடிப்பது கூடாது (கல்விச் செயற்பாட்டில் அவர்களை அக்கறை செலுத்த வைக்கவும், அவதானிக்க வைக்கவும், தாமாகக் கற்பதற்குரிய ஊக்கத்தை வழங்கவும் அடிப்பது) என்று அழுத்திப்பிடிப்பது எங்ஙனம் பொருத்தமானது...?

**மூன்றாவதும் முக்கியமானதும்**
ஆசிரியரின் மன நிலைக் குழப்பம் காரணமாக மாணவர்கள் தாக்கப்படுவது.
இதைத் தான் தவிர்த்தாக வேண்டும். தண்டனைக்குரியதும் இதுவே. இதற்காக ஆசிரியர்களை நிச்சயம் தண்டிக்க வேண்டும். ஆனால் இதிலும் அரசுக்கு உடந்தை இருக்கிறது. பரீட்சைகள், படிப்பு, நேர்முகத் தேர்வுகள், கல்வித் தகமைகள் எனப் பல படிநிலைகளைப் பரீட்சித்து அவற்றினூடாக ஆசிரியர்களைப் பணிக்கமர்த்திவிட்டு அவர்களிடம் அதைத் தாண்டிய தகுதி ஒன்றை எதிர்பார்ப்பது முறையற்றதில்லையா...? அவர்களின் வேலைக்கு - பணிக்கு ஏற்ப திறனும் ஆற்றலும் அவர்களுக்கு இருக்கிறதா என்பதைப் பரீட்சித்தோ, அல்லது அவற்றை உரியமுறையில் அவர்களுக்கு வழங்கிய பின்னரோ தானே அவர்களை அந்த வேலைக்கு உள்ளீர்க்க வேண்டும். அவ்வாறில்லாமல் வேலைக்கு அமர்த்தியவர்கள் அடிக்கிறார்கள் என்று அவர்களைப் பின்னர் சிறைப்பிடிப்பதென்பது கோமாளித்தனமாகவில்லையா...? வேலைக்கு அமர்த்தும்போதே அவரிடம் அந்தத் தகுதியைப் பரீச்சித்துவிடுவது அல்லது உருவாக்கிவிடுவதுதானே முறையானது...? கல்வித்தகுதிகளை மாத்திரம் கணக்கெடுத்து வேலைக்கு அமர்த்திவிட்டு அதைத் தாண்டி அவர் அடிக்கிறார் என்று கைது செய்வது முறையானதா...?

**மையப்புள்ளி**
இவையெல்லாவற்றையும் தாண்டி இப்படி ஒரு பிரச்சினையும் உள்ளது...! யாராது கவனித்தீர்களா...? ஆசிரியர்கள் அடிப்பதால் மாணவர்கள் மன அழுத்தத்துக்கும் மனப் பாதிப்புகளுக்கும் உட்படுவதைவிடப் பன்மடங்கான அழுத்தத்தையும் மன நிலைப் பாதிப்பையும் இந்தப் பாடசாலைக் கல்வியால் உட்படுகிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா...? பாடசாலை முடிவடையும்போது மாணவர்கள் எவ்வாறு மகிழ்ச்சியுடனும் விடுதலை உணர்வுடனும் ஓடித் தப்பிடும் எண்ணத்தில் பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்கள் என்று எப்போதாவது ஆற அமர்ந்திருந்து அல்லது வழிப்போக்காகவேனும் பார்த்திருக்கிறீர்களா...?
இப்போது உங்களது இந்தப் புதிய சட்டத்தால் அதே எண்ணத்தில்தான் ஆசிரியர்களும் இருக்கிறார்கள் (பாடசாலையை விட்டு ஓடும் எண்ணத்தில் - அல்லது பாடசாலை எப்போது முடிவடையும் என்ற எண்ணத்தில் - இந்தச் சட்டம் இறுக்கமாவதற்கு முன்னர் இவ்வாறான மனநிலையில் இருந்தவர்கள் தவிர) இவையெல்லாமும் இங்குள்ள கல்வித்திட்டம், ஆசிரியப் பணி ஆகியன குறித்த மலினத் தன்மைக்கு ஓர் உதாரணம். இவற்றையெல்லாவற்றையும் தவிர்த்துவிட்டு மாணவர்களைத் தண்டிக்கும் ஆசிரியர்களைச் சிறைப்பிடிக்கும் திட்டத்தை முடுக்கிவிட்டிருப்பது அநாவசியமானது.

**குற்றவாளியை வளர்த்த பெருமை**
அண்மைக் காலத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் பலர் இதுவிடயத்தில் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் குற்றவாளிகள் எனில் இந்தக் குற்றத்தின் பங்கு தகுதியில்லாதவர்களை வேலைக்கமர்த்திய அரசுக்கும் உண்டல்லவா...? குற்றவாளி என்று தெரியாமல் வேலைக்கு அமர்த்திவிட்டோம் என்று நழுவிவிட முடியாது. குற்றம் செய்யும்போதுதான் அவர் குற்றவாளியாக முடியும் என்று வியாக்கியானம் செய்து தப்பிவிடவும் முடியாது. சிறைப்பிடிக்கப்பட்ட அந்த அதிபர்கள், ஆசிரியர்கள் எத்தனை பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கியிருப்பார்கள்...? ஆனா எழுதப் பழக்கியிருப்பார்கள்...? தேசியக் கொடிகளை ஏற்றியிருப்பார்கள்...? எத்தனை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியிருப்பார்கள்...? எத்தனை நிகழ்வுகளைத் தலைமை தாங்கி நடத்தியிருப்பார்கள்...? எத்தனை பேருக்கு ஆசீர்வாதங்கள் வழங்கியிருப்பார்கள்...? விழாக்கள் - கொண்டாட்;டங்களில் மதிப்பளிக்கப்பட்டிருப்பார்கள்....? இத்தனை விடயங்களிலும் இதுவரை காலமும் சமூகத்தில் பங்களிப்புச் செய்தவர் ஒரு குற்றவாளி என்பது எவ்வளது துக்ககரமானது...? இதில் எங்கெல்லாம் தவறுகள் இருக்கின்றன என்று இன்னும் உங்களுக்கு ஞானம் பிறக்காவில்லையா...?

> மாணவர்களுக்கு அடிக்க வேண்டிய யதார்த்த நிலை இருக்கும்போது அவ்வாறில்லை அடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்கின்றன இலங்கைச் சட்டதிட்டங்கள். இதனால் எழுந்திருப்பதே இந்தச் சிக்கல். அப்படியாயின் இந்த விடயத்துக்குத் தீர்வுதான் என்ன...? மாணவர்களைத் தண்டிப்பது தவறானதா? சரியானதா...? அடித்தே ஆக வேண்டியிருக்கிற யதார்த்தத்தைக் கடந்து செல்வதற்குரிய தீர்வாக மேற்குறித்த தரப்பினர் தீர்வெதனையாவது முன்வைக்கிறார்களா...?

# அரசுக்கு எதிராகப் போராடாமல் உங்களுக்கு எதிராகப் போராடுங்கள்...?

நாகராசா

வடக்கில் அத்துமீறும் பௌத்தத்தையும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளையும் எதிர்த்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியினரும் தமிழ் அரசுக் கட்சியினரும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பௌத்த விகாரைகள், புத்த சிலைகள், அரச மரங்களை நிறுவுதல்களுக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். இவற்றில் பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எனப் பலரும் ஈடுபடுகின்றனர். இவர்கள் இணைந்து ஒரே விடயத்தில் ஈடுபட்டாலும் அதில்கூட இவர்களுக்கு இடையில் முரண்பாடுகள் உள்ளன. இந்து மதப் பற்று, இனப்பற்று, கட்சி அரசியல் என்கிற கோணங்களில் இவர்களின் நகர்வுகள் இருக்கின்றன. சிங்கள மயமாக்கலுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்னதாக வேளாளர் அல்லாத சாதியினரைக் கோவிலுக்குள் அனுமதிக்காததை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவுக்காகப் போராட்டங்களில் ஈடுபடுவதே அவசியமானது.

### சிங்களவன் பரவாயில்லை

ஒடுக்கப்பட்ட மக்கள் தமது கோவில்களுக்குள் நுழைவதைத் தடுக்கின்ற வர்களின் மனநிலையில் சிங்களவர் கள் கோவில்களுக்குள் நுழைவதோ, வேறு சமயத்தவர்கள் நுழைவதோ பெருமையாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அந்த ஊரைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்பதிலும் தேர் வடத்தில் தொடக்கூடாது என்பதிலும் பல கோவில் நிர்வாகங்கள் திடமாக உள்ளன. படைச் சிப்பாய்கள், இயந்திரங்கள் எனப் பல்வேறு விதமாகத் தேரிழுத்த சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன. மாற்றுச் சாதிகளைத் தமக்குச் சமமாக நிறுத்தும் விடயத்தில் சிங்களவன் பரவாயில்லை என்ற எண்ணமே இவர்களுக்குள் இழையோடியிருக்கிறது. இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்கு விலக்களிப்பவர்களுக்கு எதிராகத் தமிழ்த் தலைவர்களும், இந்து மதத் தலைவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் ஏன் இதுவரை களமிறங்கவில்லை...?



### தென்னாபிரிக்க நிலை

நெல்சன் மண்டலோவுக்கு முற்பட்ட தென்னாபிரிக்காவில் சிறுபான்மையாக இருந்த வெள்ளையினத்தவர் அங்கிருந்த பெரும்பான்மைக் கறுப்பு இனத்தவரை அடிமைப்படுத்தினர். அதைப்போலவே இங்கு சிறுபான்மையாகவுள்ள மேட்டுக்குடியினர் பெரும்பான்மையினராகவுள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினரைச் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒடுக்கி வருகின்றனர். இதை யாரும் வெளிப்படையாகக்கூறுவதற்கு முன்வருவதில்லை. தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் முன்னின்று தீர்த்து வைக்க வேண்டிய இந்த விடயத்தில் அவர்கள் வேண்டுமென்றே தலையிடுவதில்லை. அவ்வாறு தலையிட்டால் இதுவரை



தாம் கட்டிக் காத்துவரும் தமது உயர் சாதி அரசியலுக்கு அது பாதக மாகிவிடும் என் பது அவர்களுக்குத் தெரியாததல்ல.

**ஒடுக்கப்பட்ட மக்கள் தமது கோவில்களுக்குள் நுழைவதைத் தடுக்கின்றவர்களின் மனநிலையில் சிங்களவர்கள் கோவில்களுக்குள் நுழைவதோ, வேறு சமயத்தவர்கள் நுழைவதோ பெருமையாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அந்த ஊரைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்பதிலும் தேர் வடத்தில் தொடக்கூடாது என்பதிலும் பல கோவில் நிர்வாகங்கள் திடமாக உள்ளன. படைச் சிப்பாய்கள், இயந்திரங்கள் எனப் பல்வேறு விதமாகத் தேரிழுத்த சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன.**

**வேற்றுக் கோசங்கள்**

தமிழர் பிரதேசங்களில் நடக் கின்ற சிங்கள - பௌத்த அத்துமீ றல்களை எதிர்க்கின்ற இந்த அரச எதிர்ப்பாளர்கள் தமது ஊர்களில் நின்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்வதிலும் காவல் துறையினர், படையினருக்கு எதி ராகக் கோசங்களை எழுப்புவதிலும் நடாளுமன் றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் வெளியேறிச் சென்ற பின்னர் வெற்றுக் கதிரைகளுக்குத் தமது பிரச்சினைகளைச் சொல்லி உரையாற்றுவதிலுமே குறியாக இருக்கின்றனர். இதைவேறு தமிழ் ஊட கங்களில் விசிறி விடுகிறார்கள். இவர்க ளின் கட்சிக்கும் தனி நபர்க ளுக்கும் தனி யான ஆஸ்தான ஊடக வியலாளர்களை இதற்காக வைத்தி ருக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர் களுக்கு எதிராகப் பேராட் டத்தில் ஈடுபடும் இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகளை தமிழ் மக்கள் நிராகரிப் பதே நடந்து வருகிறது. தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்பவர்கள்கூட குறைந்த எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று வென்றவர்களாகவே இருக்கி றார்கள்.

**சாதிக்கொரு கோவில்**

இங்குள்ள ஒவ்வொரு சாதியின ருக்கும் குலதெய்வ வழிபாடுகள் உண்டு. அந்த அடிப்படையிலேயே யாழ்ப் பாணத்தில் கோவில்கள் கட் டப்பட்டுள்ளன. இங்குள்ள கோவில்களை வைத்து அங்கு வாழும் மக்கள் எந்தச் சாதியினர் என்பதை ஊகித்துவிடக்கூடிய அளவில் தமிழ்ச் சமூகம் சாதிய ரீதியாகப் பிளவுபட்டுள்ளது. நல்லூர் ஆலயப் பிரவேசத்துக்காக யோகர் சுவாமிகள் தலையிட்டதால் எல்லாச் சமூகத்த வர்களும் அந்தக் கோவிலுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டது. அதனால் தான் நல்லூருக்கு அதிக மக் கள் செல்லும் வாய்ப்பும் தமது ஊர் களில் உள்ள சாதிக்குரிய கோவில்க ளைத் தவிர்த்து தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் அங்கு அதிகம் ஒன்றுகூடும் வழக்கமும் ஏற் பட்டது.



தமது ஊர்களில் உள்ள சிவன், முரு கன், பிள்ளையார், அம்மன் கோவில்க ளுக்குள் போக முடியாதவாறு சாதித் தடையை அனுபவித்து வரும் மக்க ளால்தான் இதுபோன்ற பொதுவான கோவில்கள் பிரபல்யம் அடைகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் தத்தமது ஊர்க ளில் உள்ள கோவில்களுக்குள் சென்று வணங்குவதற்கு வழிவகுக்கும் வகை யிலான போராட்டங்களை அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி வரும் இந்தக் காட்போட் போராளிகள் முன்னெடுக்கவேண்டும். அதற்குத் தமிழ் அரசு கட்சியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியும் தமது சாதி அரசி யலைக் கைவிடத் தயாராக இருக்க வேண்டும். சிங்கள பௌத்த ஆட்சி யாளருக்கு எதிராகப் போராடாமல் கோவிலுக்குள் மாற்றுச் சாதியினர் வரக்கூடாது என அடம்பிடிக்கும் சாதியினருக்கு எதிராகப் போராடி வேற்றி பெறுவதே முதல் தேவை. அனைவரும் ஒற்றுமைப்பட்ட பின்னர் தான் ஒன்றிணைந்து சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடத் துணியவேண்டும்.

# உயிர் தப்பிய சரத் பொன்சேகா...!

2005இல் மகிந்த சிந்தனையில் மகிந்த குறிப்பட்டது என்னவெனில் ''எனக்குப் போரில் நம்பிக்கை யில்லை திரு. பிரபாகரனை நேரில் சந்தித்துச் சமாதானச் சூழல் ஒன்றை ஏற்படுத் துவேன்'' என்று. போர் செய்வதற்கு அரசியல் வாதிகள் தயாராக இருக்கவில்லை. ஜெனரல் கொப்பேகடுவ கூட போரை முடிக்க முடியாது என்றே நம்பினார். நான் அவ்வாறு சிந்திக்க வில்லை.



02

மொழியாக்கம்
கமலநாதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

குண்டு வெடித்ததும் அதிர்ச்சியாக இருந்தது. நான் அணிந்திருந்த தொப்பி கிழிந்திருந்தது. நாடியிலும் தோளிலும் காயம் பட்டது. வயிறு கிழிந்து குடல் வெளியே வந்திருந்தது. ஆனால் வேதனை தெரியவில்லை. தொடர்ச்சியாக ஒன்றரை மாதம் அவசர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தேன். அதன் பின்னர் என்னைப் படையினரின் மருத்துவமனைக்கு மாற்றினார்கள்.

குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்த அன்றிரவு அப்போதைய அரசதலைவர் மகிந்த ராஜபக்ச மருத்துவமனைக்கு வந்து என்னைப் பார்த்தார் என்று அறிந்தேன். இவரைக் கட்டிலில் கிடந்தபடியாவது கட்டளையிடும் அளவுக்குக் காப்பாற்றித்தாருங்கள் என்று எனக்குச் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் கேட்டுக் கொண்டார் என்று அந்த மருத்துவர் பின்னர் எனக்குக் கூறினார். பின்னர் மகிந்த ராஜபக்சவுக்கும் எனக்கும் முரண்பாடுகள் வந்த பின்னர் அந்த மருத்துவருக்கும் பல நெருக்கடிகளைக் கொடுத்தனர் என்று அறிந்தேன். என்னை முக்கியப்படுத்தி அவர் கூறிய விடயத்தை எனக்குத் தெரியப்படுத்தக்கூடாது என்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக என்னைச் சிங்கப்பூருக்கு அனுப்பினார்கள். நான் சிங்கப்பூரிலிருந்து வந்த சில நாள்களில் மாவிலாறு சண்டை தொடங்கியது (2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி). இந்தச் சண்டை ஆரம்பித்து 2 நாள்களின் பின்னர் நான் சீருடை அணிந்து பணிக்குத் திரும்பினேன்.

1993இலும் 1998இலும் இரண்டு தடவைகள் காயப்பட்டு உயிர் தப்பியிருந்தேன். அந்தத் தாக்குதல்களால் எனது ஈரலில் அரைவாசி நீக்கப்பட்டது. சிறுகுடலில் 8அடி நீளமான பகுதி துண்டிக்கப்பட்டது. காலில் நான்கு இரும்புகள் முழங்காலுக்கு அருகில் பொருத்தப்பட்டன. இறுதியாக நடந்த தாக்குதலால் எனது உடலில் 26 இரும்புத் துண்டுகள் உள்ளன. இப்போது நான் எப்படிக் காப்பாற்றப்பட்டேன் என்று தெரியவில்லை. இந்தத் தாக்குதலில்

நான் இறந்திருந்தால் 2009இல் போரை முடித்திருக்க முடியாது. எப்போதோ ஈழம் கிடைத்திருக்கும். 2005இல் மகிந்த சிந்தனையில் மகிந்த குறிப்பட்டது என்னவெனில் "எனக்குப் போரில் நம்பிக்கையில்லை திரு.பிரபாகரனை நேரில் சந்தித்துச் சமாதானச் சூழல் ஒன்றை ஏற்படுத்துவேன்" என்று. போர் செய்வதற்கு அரசியல்வாதிகள் தயாராக இருக்கவில்லை. ஜெனரல் கொப்பேகடுவ கூட போரை முடிக்க முடியாது என்றே நம்பினார். நான் அவ்வாறு சிந்திக்கவில்லை. போரை முடிக்க முடியும் என்று உறுதியாக நம்பினேன்.

ஜூலை 25ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்தபோது சக்கர நாற்காலியில் வந்தேன். அப்படியே தூக்கி உலங்குவானூர்தியில் ஏற்றினார்கள். இரவு 9.30மணியளவில் வீட்டுக்கு வந்ததும் நான் வந்துவிட்டேன் என்று கோட்டாபயவுக்குத் தொலைபேசி அழைப்பெடுத்து அறிவித்தேன். ஒரு பிரச்சினை இருக்கிறது என்று கோட்டாபய என்னிடம் கூறினார். என்னவென்று கேட்டேன். மாவிலாற்றைப் பூட்டி விட்டார்கள் என்றார். ஏன் அடித்துப் பிடிக்கவில்லை என்று அவரிடம் கேட்டேன். அடித்துப் பிடிப்பதற்குப் போதிய ஆளணி இல்லை என்று பதில் கட்டளைத் தளபதி கூறினார் என்றார். எனக்குப் 15 நிமிட அவகாசம் தாருங்கள் மீண்டும் உங்களுடன் தொடர்புகொள்கிறேன் என்று கோட்டாபயவுக்குக் கூறினேன்.

பின்னர் கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி, மாவிலாற்றுக்குப் பொறுப்பாக இருந்த படை உயரதிகாரிகள் ஆகியோருடன் தொடர்புகொண்டு நிலமையை அறிந்த பின்னர் மீண்டும் கோட்டாபயவுக்குத் தொடர்பெடுத்து அடிப்போம் என்று கூறினேன்.

போர், படை நடவடிக்கை, பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாகப் புத்தகங்களைப் படித்து அறிந்து செயற்பட்டவன் அல்ல நான். அந்தச் சூழலை விளங்கி முடிவுகளை எடுத்தேன். நான்கு மாதங்கள் வரை நான் களத்தில் இல்லாதபோதிலும் நிலமையை உடனடியாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

**முன்னால் போனால் ஜொனி பின்னால்போனால் பொனி**

முன்னால் போனால் ஜொனி பின்னால் போனால் பொனி என்று பலரும் கூறுவதுண்டு. முன்னால் செல்லும்போது புலிகளின் ஜொனி வெடியில் சிக்க வேண்டும். பின்னால் செல்லும்போது பொனி என்கிற பொன்சேகாவிடம் அகப்படாமல் இருக்கவேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

யாழ்ப்பாணம் கோட்டைச் சண்டையில் 100பேர் கொண்ட 3அணிகள் எனது தலைமையில் செயற்பட்டன. அப்போது நான் லெப்ரினன் கேணல் ஆகப் பதவி வகித்தேன். அதில் மண்டைதீவில் நின்ற 100 பேர் கொண்ட அணிக்குப் பொனிசத் பெரேரா பொறுப்பாக இருந்தார். அவரைப் பொனி என்று அழைப்பார்கள். அவரது அணி போரில் சற்றுப் பின்னடைவைச் சந்தித்தபோது நான் அவருக்குக் கொடுத்த அறிவுறுத்தலின் பின்னர் அவர்கள் உருவாக்கிய கதைதான் முன்னால் போனால் ஜொனி வெடி பின்னால் வர முடியாது பொனி நிற்கிறார் என்பது. நான் பொறுப்பாக இருந்து செயற்பட்ட எந்தப் படை நடவடிக்கைகளின்போதும் நான் இடையில் நிறுத்திப் பின்வாங்கவில்லை.



**பிரபாகரனைவிட அரசியல்வாதிகளின் அழிவே அதிகம்**

நான் காயப்பட்டு உடல் முழுதும் இரும்புத் துண்டுகள், காயங்கள் என எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு மீண்டும் போரிடத் தயாராக இருந்தது எனது நாட்டைக் காப்பாற்றவே. பிரபாகரன் இந்த நாட்டுக்குச் செய்த அழிவைவிட அரசியல்வாதிகள் செய்த அழிவே அதிகம் என என்னால் உணர முடிந்தது. குண்டுத் தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட கார் எப்படி எனது கைக்கு வந்தது என்று பலரும் கேட்பதுண்டு. அது போர் சாட்சியாக, சின்னமாகப் பேணப்படவில்லை. என்னைச் சிறைக்குள் அடைத்த மகிந்த தரப்பு படையினர் பாவித்த பழைய வாகனங்களை ஏலத்தில் விற்பது வழக்கம். அவ்வாறு இந்தப் பெறுமதியான வாகனத்தையும் ஏலத்தில் விற்றார்கள். அதை விற்கவிருக்கிற செய்தியை அறிந்து ஒருவரை வைத்து நான் அதை ஏலத்தில் வாங்கினேன். அதை 2010 அரசதலைவர் தேர்தலில் நான் பொதுவெளியில் காண்பித்தபோதுதான் மகிந்த தரப்புக்குத் தெரியவந்தது இந்தக் காரை நான் எனது உடமை ஆக்கியது பற்றி. எனது வரலாற்றை மூடி மறைக்க அவர்கள் எடுத்த முயற்சி சாத்தியப்படவில்லை. (முற்றும்)

# விக்னேஸ்வரனைப்போல ஓய்வுப் பொழுதை கழிக்க முனையும் பேராசிரியர் பத்மநாதன்...!

சத்தியநாதன்

**2016**ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு என்று அழைக்கப்பட்ட ஆட்சியாளர்களின் காலத்தில் தைப்பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது. அந்த விழாவுக்கு அப்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் அரசதலைவரான சந்திரிகாவும் சிறப்பு அதிதிகளாக வந்திருந்தனர். பொங்கல் விழா மருதனார்மடம் இராமநாதன் மகளிர் பாடசாலையில் நடந்தது. அதன் பின்னர் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. மருத னார்மட நிகழ்வில் கலந்துகொண்ட சந்திரிகா அதன் பின்னர் வீரசிங்கம் மண்டபத்துக்குச் சென்றார். அங்கு பிரதான வாசலுக்கு அருகிலிருந்த கதிரையில் அமர்ந்திருந்த பேராசிரியர் பத்மநாதன் சந்தரிகா உள்ளே வருவதைக் கண்டு கதிரையிலிருந்து எழுந்து திரும்பி நின்று அவரைப் பார்த்துக் கும்பிட்டுச் சிரித்துத் தனது நன்றியையும் அன்பையும் தெரிவித்தார். இந்தக் காட்சியைப் பலர் மறந்திருப்பார்கள். இது சாதாரணமாகக் கடந்துசெல்லக்கூடிய ஒரு காட்சியல்ல.

அது வெறும் வரவேற்பும் அல்ல. மிக நீண்டகாலமாக சிறிமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா ஆகியோருடன் இருந்து வருகிற நட்புறவின் வெளிப்பாடே அது. தமிழ்ப் புத்திஜீவிகள் பலர் தமிழ் அரசுக் கட்சியுடன் ஒன்றித்து நிற்பதில்லை. தமது தனிப்பட்ட தேவைகளுக்காகச் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நெருக்கமான உறவைப் பேணுகின்றனர். அவ்வாறான ஓர் உறவுக்காரரே பேராசிரியர் பத்மநாதனும்.

**விக்னேஸ்ரனைப்போல...!**

**2013**இல் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடப்பதற்கு முன்னரான காலம் வரை உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்து அதிலிருந்து ஓய்வுபெறும் வரை அரச விசுவாசியாக இருந்த விக்னேஸ்வரன், ஓய்வின் பின்னர் தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் ஆங்காங்கே பல மேடைகளில் பேசி வந்தார். அதை ஊக்கப்படுத்தி முதன்மை கொடுத்துத் தமிழ் மக்கள் மீது அக்கறையுள்ள ஒருவராகத் தமிழ் ஊடகங்கள் அவரைக் காட்டின. அதன் பின்னணியிலேயே அவர் முதலமைச்சர் வேட்பாளர் ஆகினார். வடக்குக் கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கு எதிரான நடவடிக்கையாக வடக்குக்குத் தனியாக நடந்த தேர்தலில் குதித்தார். அதேபோன்றதொரு விடயமே பேராசிரியர் பத்மநாதன் விடயத்திலும் நடந்து வருகிறது.

பல்கலைக்கழகப் பேராசிரியாரக இருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராகப் பதவி வகித்த இவரது அந்தப் பதவி காலாவதியாகும் நிலை வருகிறது. இதனால் இதுவரை தமிழ் மக்களின் விடயத்தில் வாய் திறக்காத அவர் தற்போது களமிறங்க முற்படுகிறார். அத்துடன் அவருக்குப் பின்னால் நின்று செயற்படுகின்ற யாராலோ களமிறக்கப்படுகிறார் என்றும் தெரிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்களின் தொகை அதிகரித்ததால் கலைப்பீடம் தவிர ஏனைய பீடங்கள்



சிங்கள மயப்படுத்தப்பட்டு விட்டன. இதே நிலையே இன்னும் 5 வருடங்களில் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்துக்கும் ஏற்படும் என்று அவர் கூறியிருப்பது இதன் முதற்படிதான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிங்கள மயமாக்கப்படுவதைத் தனது வேந்தர் பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இதுவரை ஊடகங்களுக்கு அறிவிக்காமல் தவிர்த்துக் கொண்டவர் இப்போது அறிவித்துள்ளார்.

விக்னேஸ்வரனைப்போன்று பேராசிரியர் பத்மநாதனும் மேட்டுக்குடி வேளாளர். கல்விமான். அவரைப் பதவிக்குக் கொண்டுவருவதைப் பெருமையான விடயமாகக் கருதுகின்ற யாழ்ப்பாணத்து மக்கள் வயோதிபரான அவரால் அவ்வாறான ஒரு பதவியைச் சிறப்பாக ஆற்ற முடியுமா என்று சிந்திப்பதாக இல்லை. அது அவர்களுக்கு நன்கு தெரிந்தாலும் வேளாளர் ஒருவர் அந்தக் கதிரையில் அமர வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு அமர்த்தினால் வடமாகாணத்தின் இரண்டாவது சபையாலும் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதே உறுதி.



**புலிகளைப் விமர்சித்தவர்**

டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரனைக் கொன்றதன் பின்னர் அவர் தனது பாதுகாப்புக்காக எடுத்த முயற்சிகளைத் தவறானது என்று கூறிவிட முடியாது எனப் பேராசிரியர் பத்மநாதன் கூறியபோதிலும் புலிகளின் தலைவரின் பாசறையில் வளர்ந்ததாகத் தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனோ செல்வராசா கஜேந்திரனோ போராசிரியினர் இந்தக் கூற்றுப் பற்றி வாய் திறக்கவில்லை. இதே கருத்தைப் பேராசிரியர் பத்மநாதனைத் தவிர வேறு யாராவது கூறியிருந்தால் தமிழ் ஊடகங்கள் குமுறிக் கொதித்திருக்கும்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைவிட்டுத் தனது குடும்பத்துடன் பேராசிரியர் பத்மநாதன் வெளியேற முற்பட்டபோது சங்குப்பிட்டியில் வைத்துப் பயண அனுமதி இல்லை என்று புலிகள் அவரைத் திருப்பி அனுப்பினார்கள். அதன் பின்னர் கடுமையாக அலைந்து திரிந்த பின்னரே புலிகளின் பயண அனுமதி பெற்று இங்கிருந்து அவர் வெளியேறினார். அப்போதிருந்தே புலிகளை அவருக்குப் பிடிப்பதில்லை. ஈழப்போராடடம் பற்றியோ தமிழ் மக்களின் விடயங்களிலோ புலிகளுக்கு எதிராகவே இதுவரை அவர் வெளிப்படையாகக் கருத்துக் கூறியதில்லை. ஆனால் இலங்கை அரசையும் இந்திய அரசையும் ஒரு கல்லில் இரு மாங்காய்கள் என அடித்து வீழ்த்தக் கூடியவர் இவர்.

இவரது அரசியல் நுழைவு இனிவரும் காலத்தில் தமிழ் அரசுக் கட்சியையும் புலி ஆதரவு அரசியல் நடத்துபவர்களையும் பாதிக்கும் நிலையில் இருக்கும். தற்போது மேட்டுக்குடியினர் இடையிலான அரசியல் போட்டிக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகப் பேராசிரியர் பத்மநாதனின் வருகை இருக்கும். இனி நடக்கப்போகும் வட மாகாணசபைத் தேர்தலில் அவரை முதல்வராகத் தர முயர்த்துவார்கள் என்றே கருதப்படுகிறது.



05

அருண்பாக்யா

# மிக நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதியம்

**மணியகாரர்**

யாழ்ப்பாண மன்னராட்சிக்காலத்தில் உத்தியோகபூர்வமாக வரி அறவீடு செய்த தரப்பினரே மணியகாரர். மன்னராட்சிக் காலத்திலிருந்து பிரித்தானியர் ஆட்சிக் காலம் வரை இவற்றைத் தொடர்ந்தார்கள். இத்தகைய மணியகாரர்களாக அதிகம் பேர் இருக்காவிடினும் இந்தப் பதவிகளில் இருந்தவர்கள் தமது பரம்பரைக்குச் சொத்துச் சேர்க்கும் வாய்ப்பைப் பெற்றனர். இவர்களும் ஒல்லாந்தர் காலத்தில் தம்மைச் சொத்துடைய மேட்டுக்குடியினராக ஆக்கிக் கொண்டனர்.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து பல்வேறு பயிர்வகைகளைக் கொண்டுவந்து இலங்கையில் நாட்டினார்கள். அதன்மூலம் அதிக லாபத்தை அடைந்தனர். புகையிலை உற்பத்தி இவர்களாலலேயே அறிமுகப்படுத்தப் பட்டது. ஒல்லாந்தர் ஏற்றுமதியில் குறியாக இருந்தனர். பயிர்ச்செய்கை, அறுவடை, ஆதன வரி அறவிடல் ஆகிய விடயங்களில் தமது நாட்டவரைக் களமிறக்காது உள்நாட்டவர்களை வைத்தே நிர்வகித்தனர். இதனால் மணியகாரர் என்கிற பதவியில் பலரை நியமிக்க வேண்டிய தேவையும் இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே மணியகாரர்கள் அதிகம் சொத்துச் சேர்க்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

**செம்ப உடையார் - மானிப்பாய், எதிர்நாயக முதலியார் - வட்டுக் கோட்டை இவரது மகன் குலநாயக முதலியார். இவரது மகன் குலசேகர முதலியார் எனப் பல குறிப்புகள் சாதி, பரம்பரைகளைச் சுட்டிக்காட்டு வதாகக் காணப்படுகின்றன**

**யாழ்ப்பாண வைபவ கௌமுகி**

யாழ்ப்பாண வைபவ கௌமுகி என்கிற நூலில் மேட்டுக்குடி வேளாளர் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. டொன் பிலிப் சங்கரப்பிள்ளை, "இவனது பிறப்பிடம் கண்ணங்கிராய். எனக் கூறப்பட்டிருக்கிறது. இவன் 1680ஆம் விசித்திர மாளிகை ஒன்றில் வசித்தார். மாதகலில் இருந்து அங்கு சென்ற இவர் மடந்தைய முதலியாரின் புத்திரியை மணந்து "ஏழு பண்ணைக்காரன்" என வாழ்ந்தார்.

வேலாயுதர் குடும்பம் - மானிப்பாய் இவரது மகன் இராமர். அவரது மகன் நொத்தாரிசு சின்னத்தம்பி யினராயினர். அரசர்களால் தானமாக வழங்கப்பட்ட கோவில் நிலங்களின் நிர்வாகத்தைப் பினனர் தமது நிலமாக்கிக் கொண்டனர்.

ஒல்லாந்தர் காலத்தில் 18 இறைசாலுக்கு (பணம் அல்து சொத்து) வேளாளர் பட்டம் விற்கப்பட்டது. இதைப் பயன்படுத்திப் பலர் தம்மை



ஆண்டளவில் பிரசித்தி பெற்ற ஓர் வேளான் குலத் தலைவன். இவன் முயற்சியால் ஆதியிலேயே ஒல்லாந்தர் ஏற்பாட்டுக்கு மாறாக இறை சுவதோர் (வரி அறவிடுவோர்) கணக்கப்பிள்ளை, ஆராய்ச்சி, என்றும் எல்லாம் இவன் குடிப் பிறந்தவரான வேளாளர் கையிலேயே இருந்தன. இதனால் பிற சாதிகளுக்கும் இவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது."

திசை வீர ரத்தின முதலியார் - பண்டத்தரிப்பு, வேந்தக்கோன் முதலியார் (டொன் வஸ்தியாம் பிள்ளை - மாதகல்) இவரது மகன் சூசைப்பிள்ளை முதலியார்.

முத்துக்குமாரசிங்க முதலியார் (டொன் நிக்கலஸ் முதலியார்) பழைய கோட்டைக்கு அடுத்ததாயுள்ள ஊருண்டி எனுமிடத்தில் அல்லது மண்டலத்தார். இவரது மகன் சரவணமுத்துச் சிறாப்பர். இவரது மகன் மானிப்பாய் உவாக்கா கொம்பனி உரிமையாளராக இருந்தவர். கொழும்பு சோமசுந்தரம்பிள்ளை மானிப்பாய் அரியகுட்டி சுவாமிநாத பிள்ளை இவர்களது பரம்பரையே.

செம்ப உடையார் - மானிப்பாய், எதிர்நாயக முதலியார் - வட்டுக் கோட்டை இவரது மகன் குலநாயக முதலியார். இவரது மகன் குலசேகர முதலியார் எனப் பல குறிப்புகள் சாதி, பரம்பரைகளைச் சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகின்றன.

**தனக்காரர்**

தனக்காரர் என்று அழைக்கப்பட்ட வேளாளர் யாழ்ப்பாணத்தில் மன்னராட்சி வீழ்ச்சியடைந்த பின்னர் கிராமங்களில் நிலவுடமைச் சாதியா உயர்சாதிக்காரராகப் பதிவு செய்த சம்பவங்களும் நடந்தன. 1690இல் 10ஆயிரத்து 170ஆகவிருந்த வேளாளர் 1796இல் 15ஆயிரத்து 796ஆக அதிகரித்திருந்தது என்று ஒல்லாந்தர் காலப் பதிவு ஒன்று சுட்டிக்காட்டுகிறது. "பள்ளர், மறவர், கனத்த அகம்பட்டர் மெல்ல மெல்ல வேளாளர் ஆயினர்" என்று யாழ்ப்பாணத்துப் பழமொழி ஒன்றுள்ளது. இதன் பின்னணியில் மேற்குறித்த விடயம் அடங்கியிருக்கலாம்...! வேளாளர்களில் ஆதிச் சைவ வேளாளர், ஊற்று வளநாட்டு வேளாளர், சைவ வேளாளர், அசைவ வேளாளர், காக்கட்டு வேளாளர், இந்திய வேளாளர், கோவியோ எனப்பட்ட சிங்கள வேளாளர் (பின்னர் கோவியர் என அழைக்கப்பட்டனர்) எனப் பல பிரிவுகள் இருந்துள்ளன. (தொடரும்)

# இடது

*இடது கையால்
எழுத நேர்ந்தபோது
முதலாம் வகுப்புக்குத் திரும்பி
சென்று விட்டேன்
அறுபது வயதில்
அங்கிருந்து தொடங்கக் கிடைப்பது
ஒரு அரிது*

*இன்னும் எத்தனை
இடதுகள் என்னுள் இருக்கிறதோ
எத்தனை அரிதுகளை இன்னும்
தொடங்காமல் இருக்கிறேனோ*

*இடது காதல்
இடது நட்பு
இடது பகை
இடது நம்பிக்கை
இடது துரோகம்
இடது முயற்சி
இடது ஆற்றாமை
இடது பிரிவு
இடது அழுகை
இடது சிரிப்பு
இடது கவிதை*

*வலதின் வழியில்
நீண்டதூரம் வந்துவிட்டேன்*

*நான் என்பது
வாழ்ந்து முடித்த ஒரு நானும்
வாழத் தொடங்காத ஒரு நானும்*

**வாசுதேவன்**

# 23 மீட்டல்...

**துன்பானந்த சுவாமி**



கொண்டாட்டங்கள் நடைபெறுகின்ற அனேகமான மண்டபங்களில் கை கழுவுமிடம் பின்புறமாக இருப்பது மட்டுமல்ல குழாய்கள் மிக நெருக்கமாக ஒரேயிடத்திலேயே பொருத்தி வைக்கப்பட்டும் உள்ளன. சாப்பிட்ட பின்னர் அவ்விடத்தில் ஒரு சனநெரிசல் கட்டாயமானது. விருந்தென்று அழைக்கப்பட்டவர்கள் உபசரிப்பைப் பெறுவதை விட அதிகமான துன்பத்தை அனுபவிப்பது தவிர்க்க முடியாததாகவே கை கழுவுமிடம் இருக்கிறது. பல கோடிகளை விழுங்கி நிமிர்ந்து நிற்கிற மண்டபங்களில்கூட இந்நிலைதான் உள்ளது.

கை கழுவுவதற்கான இடம்இப்படியாக இருக்க கழிப்பறைகள் பற்றிய ஒரு படம் மனதில் விழுந்திருக்கும் என நம்புகிறேன். வயதானவர்களால் இலகுவில் கண்டுகொள்ள முடியாதபடி அதிலும் ஆண் பெண் வேறுபாட்டைக் கண்டு பிடிப்பதற்கு தனித்திறமை அவசியமானது. அங்கிருக்கும் சுகாதாரம் பற்றிப் பேச முனைந்தால் மண்டபக்காரரும் பயன்படுத்தும் நாமும்தான் குற்றவாளிகள். நீர் வசதிக் குறைவுகள் இருப்பதும் பயன்படுத்துவோர் சரியாக பயன்படுத்துவதில்லை என்பதும் உண்மை.

இவற்றைவிட மண்டபக் காற்றோட்டமென்பது மிக மோசமானது. வளிச்சீராக்கிகளோ சரியானபடி இயக்கப்படுவது கிடையாது. குளிர் அதிகமாகவோ குறைவாகவோதான் இருக்கிறது. மின்விசிறிகள் போதியதாகவும் இருப்பதில்லை. மொத்தத்தில் விரை



கதிரேசன் காத்தவராயன்

# புத்திசாலியளெண்டிறதுக்கு தகுதியிருக்கோ?

அண்டைக்கதிலை சுழிபுரத்திலை சிவகுருவரின்ரை பேத்திக்குச் சாமத்தியவீடு எண்டு கட்டாயமாய் வரவேணுமெண்டு கூப்பிட்டிருந்தார். முருகேசருக்கும் அழைப்பிருந்ததாலை அவரையும் கூட்டிக்கொண்டு போயிருந்தன். சங்கானைக்கங்காலை முருகேசர் குழறிக்கூப்பாடு போட்டபடிதான் வந்தார் றோட்டு அப்பிடியல்லே.

அங்கை தகரப் பந்தல் நெருப்புப் பிடிக்கும்போலை இருந்துது. 'இஞ்சார் கதிரேசண்ணை அங்காலை அதிலை வேம்பொண்டு நிக்குது? போயதிலை இருப்பமோ?' எண்டார் முருகேசர். ரண்டுபேருமாய்க் கதிரையளை எடுத்துக்கொண்டு போனம். அங்கை சங்கரப்பிள்ளையர் எங்களைக் கண்டிட்டு 'வாங்கோ வாங்கோ கண்டு கனகாலமாப் போச்சுது' எண்டு வரவேற்றார். 'அகழிகள் குழியளோடை பாதுகாப்பாய் இருக்கிறாய்... வரப் போக ஏலுமோ?' எண்டன் நான். 'என்னப்பா கதிரேசு றோட்டைச் சொல்லுறியோ?' எண்டு அவர் சிரிக்க நாங்களும் சிரிச்சம். அதிலை இருந்தாக்களும் சிரிச்சினம்.

'இதிலை இந்த மரம் இல்லையெண்டால்...என்ன பாடப்பா பட்டிருப்பம்?' எண்டார் முருகேசர் வேர்வையை ஊதினபடியே. 'உண்மைதான்...மரங்கள் இல்லையெண்டால்...' எண்டு நான் சொல்லி முடிக்கமுன்னம் அதிலை இருந்த ஒராள் 'இல்லையெண்டால் பிரச்சனை...இருந்தால் பிரகண்டமாயல்லேகிடக்குது?' எண்டார் கவலையோடை.

'ஏனப்பா அரச மரங்களின்ரை பிரச்சனையைச் சொல்லுறீரோ?' எண்டார் சங்கரப்பிள்ளையர் ஆவலோடை. 'ஓமோம்.. அங்கையிஞ்சையெண்டு கனக்க நடந்தது வுலகம். உறவுகள் தூரவாகிவிட்டன உதவிக்கு ஆட்களில்லை போன்ற காரணங்களால் மண்டபங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. உறவுகளை ஒன்றாக்கும் அரிய வாய்ப்பான வீட்டு நிகழ்வுகளை இவ்வாறான மண்டபங்களில் ஏற்பாடு செய்வதன் மூலமாக இருந்த உறவுகளும் விரிசலடைவதே நடக்கிறது.

வீடுகளில் நிகழ்வுகள் நடக்கும் காலங்களில் எவ்வளவு சிறப்பாக நடந்தேறின. உறவுகளும் அயலவரும் தமது நிகழ்வுபோலவே பொறுப்பேற் றுச் சிறப்பாக நடத்தியிருந்தனர். அங்கே ஆடம்பரம் இருக்கவில்லையா? நாகரீகம் இருக்க வில்லையா? அன்பும் அரவணைப்பும் பொங்கி வழியவில்லையா? எல்லாமே இருந்தன. நாகரீகத்தில் உயர்வாகிவிட்டோம் என்று இறுமாந்துகொண்டிருக்கிற நாம்தான் நாகரீகத்தில் மோசமாக உள்ளோம்.

வீட்டு நிகழ்வுகள் கடந்தால் ஊரில் கோயில்களது திருவிழாக்களின்போதும் எமது பண்பாடுகளை நாம் தொலைத்து நிற்பதைக்காணலாம். வெளியூரில் வதியும் உறவுகள் ஒன்றாகும் அடுத்த அரிய வாய்ப்பது. இன்று நிலை அப்படியா இருக்கிறது? வீட்டாரும் வந்தவர்களுமாக அன்னதான மண்டபத்தில்தான் சாப்பாடு. ஆடம்பரமான நிகழ்வு மண்டபங்களது நிலைபற்றிப் பேசினோமல்லவா? அவற்றினதுநிலையே அப்படியென்றால் அன்னதான மண்டபங்களது நிலை? கற்பனைசெய்து பார்க்கமுடியும்.

வீட்டில் கூடிச் சமைத்து உண்ணும் பழக்கம் ஒழிந்த விட்டது. கோயில்மடத்திலாவது கூடிச் சமைக்கிறோமா என்றால் அதுவும் இல்லை. அங்கேயும் ஒப்பந்தக்காரர்தான். கூலியாட்கள்தான் எல்லாமே. பந்தி பரிமாறுவதற்குத்தான் தொண்டர்கள் வருவார்கள். சாப்பாட்டினதுதயாரிப்புப் பொறிமுறைபற்றி அதிகம் பேசத்தேவையில்லை. அது ஒப்பந்தகார்தனக்கான பெயரை விளம்பரத்தை நாடியதாகவே அவர்களால் சுவையூட்டப்படுகிறது. சுவையூட்டிகளது தரம் யாவரும் அறிந்ததுதானே?

வீட்டுக்கு விசேடமான நாட்களில் வருவோருக்கான உபரிப்பிலிருந்து மெல்ல மண்டபங்களது துணையுடன் நழுவிவிடுகிறோம். திடீர் விருந்தாளிகளை தொலைக்காட்சியின் முன்னாலிருந்தபடியே சமாளிப்பதில் எமக்கு நிகர் நாமேதான். தோலைக்காட்சி நிகழ்வு முடியும்வரை அதிகமாகக் கதையை வளர்ப்பதில்லை. நீண்டநேரம்இருக்க வந்தவர்கள் தயாரில்லை. தேனீர் தயாரிக்க நேரஅவகாசமில்லை. குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்த ரசாயன பானத்தோடு உபசிப்பு முடிகிறது. மேலதிகமாக கடையிலிருந்து வாங்கிவந்து வைத்திருக்கிற ரசாயனச்செறிவு கூடிய சிற்றுண்டிகள் பரிமாறப்படுவதும் உண்டு. அன்புமில்லை ஆரோக்கியமுமில்லை.

உபசரிப்பு என்பதில் திடீர் விருந்தாளிகளைக் கண்டவுடன் முகம் போக்கு வந்தவரால் விளங்கிக்கொள்வது சிரமமானதொன்றல்ல. அவரதுவீட்டு நிலையும் கிட்டத்தட்ட அதே நிலைதானே. பெருந்தன்மையோடு விளங்கிக் கொண்டதாக வெளிக்குக் காட்டிக்கொண்டாலும் குற்றச்சாட்டாகப் பதிவுசெய்து வைக்கத்தவறுவதில்லை. பிறிதொருசந்தற்பத்தில் அக்குற்றச்சாட்டுஆயுதமாகப் பாவிக்கத்தயாராகவே இருக்கும்.

விருந்தோம்பல் என்கிற ஒரு தனித்துவமான பண்பாடு தொலைந்து போய்க்கொண்டிருக்கிறது. வீடுகளின் அமைப்பும் விருந்தோம்பல் என்கிற பெரிய பண்பாட்டைத்தொலைக்கக் காரணமாகவே உள்ளது. அதுபற்றிப் பேசிக்கொள்ளவும் ஏராளமாயுண்டு. பேசுவோம்.

களை கேள்விப்பட்டதுதான்..ஆனால் இப்ப இஞ்சையுமல்லே வந்திட்டுது' என்டார் இன்னொராள். 'எது பறாளாய் அதுதானே?' எண்டார் முருகேசர். 'ஓமோம் அதுதான்...இதிலை கிட்டத் தான்..ஒரு ஐந்நூறு மீர்ரர்...' எண்டார் அவர்.

'மரத்தை அவங்கள் என்ன புதி சாய் நட்டவங்களோ? நிண்ட மரத் துக்கு ஒரு வழிபண்ணாதது எங்கடை பிழையல்லே...? எண்டு எல்லாரையும் ஒரு வில்லண்டச் சிரிப்போடை பாத் தார் முருகேசர். 'முதலுமொருக்கா அங்கத்தையார் வந்து துரத்தின தல்லே... அவங்கள் இப்ப திரும்பவும் வந்திட்டாங்கள்' எண்டு அங்கலாய்ப் போடை சொன்னார் முதலாவதாள்.

'அங்கை என்ன கோயிலோ கிடக் குது? மதிலுகள் முழுதும் படங்கள்... அதுகும் அரசியல்வாதியள்..இன வாதியள்...தமிழரை அழிக்கிறதிலை முன்னுக்கு நிண்டவையின்ரை படங் கள் அதோடை ஏதோ ஒரு கோபுரம் வேறை...அது என்ன இந்துக்களின்ரை புனிதமான இடம்மாதிரியே கிடக் குது... போய்ப்பாத்தாத்தான் தெரியும்...' எண்டு அதிலை இருந்த ஒராள் புறுபுறுத்தார். 'அண்ணை..நீங்கள் சொல் லுறதும் சரிதான்...நீங்கள் சொன்னது கோபுரமில்லை நல்லிணக்கத்தூபி யாம்' எண்டார் முதல்லை கதைச்சவர்.

'எங்கடையாக்கள் முன்யோசினை யில்லாமல் செய்யிற வேலையளுக்கு உதுகும் ஒரு உதாரணந்தான்... நானும் ஒருக்காப் பாத்தனான் எண்டார் மெது வாக முருகேசர். 'முதலிலை அவங் கள் வந்தநேரமாவது நாங்கள் கவன மெடுத்திருக்கவேணும்... விட்டிட் டம்...ஆனால் தையிட்டியளவுக்கு விடயில்லையெண்டிறது ஒரு ஆறு தல்...' எண்டார் ரண்டாதாள். 'எண்டா லும் கலைச்சாச்சுது எண்ட நம்பிக்கை யிலை இருந்தது பெரிய பிழை யல்லே?' எண்டார் சங்கரப்பிள்ளையர்.

'உண்மைதான் கோயிலாலை சுத்திக் கட்டினதோடை இனிஒண்டும் நடக்காதெண்டு இருந்தது பிழை தான்..? எண்டார் ரண்டாவதாள் ஒரு ஏக்கத்தோடை. 'அந்த மரத்தைப் பிர யோசனப்படுத்தி இருந்திருக்கலாம்... ஒரு பிள்ளையாரையோ சிவனையோ ஆரையோ கொஞ்சம் பெரிசாய் வைச்சிருக்கலாமல்லே?' எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க 'இப்பவும் அரசியல் காறருக்கு நல்ல பிரயோசன மில்லே?' எண்டு சிரிப்பொண்டைச் சிரிச்சார் முருகேசர்.

'அதிலை பெரிசாய் ஏதும் செய்யிற தெண்டாலும் கோயில் சடங்கு சம்பிர தாயங்கள்...காசு பணமெண்டு சிக்க லுகள் இருக்கல்லே?' எண்டு இழுத் தார் புதிசாய் கதைக்குள்ளை வந்தவர். 'தெரியாமல்தான் அண்ணை கேக்கி றன்.. கோயிலுகள் கட்ட யானையளை குதிரையளைக் கொண்டந்து சேக்கஸ் காட்ட எண்டு காசு இல்லாமல் நடக் குதோ? ஏனப்பா அந்த நல்லிணக்கக் கோபுரத்தை கட்டின காசின்ரை ஒரு பகுதியிலை இதைச் செய்திருக்கலா மில்லே?' எண்டு கோவமாக் கேட்டார் முருகேசர்.

இருந்தவை ஆளையாள் பாத்தி னம் சங்கடத்தோடை. 'உந்தா சபை தொடங்கிட்டுது' எண்டு சங்கரப் பிள் ளையர் சொன்னது வாய்ப்பாப் போச் சுது. கதையை நிப்பாட்டிப்போட்டு எழும்பி நடந்தம்.

---

# பட்டை

## இந்த வாரச் சொல்

யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கில் பட்டை என்கிற சொல் பல்வேறு அர்த்தங்க ளில், பல்வேறு சந்தர்ப்பங் களில் பயன்பாட்டிலுள்ளது. ஒருவித வாளி அல்லது நீர் கொள்ளும் பொருள் என்ற அர்த்தத்திலும், மரத்தின் மேற்புறமுள்ள கடினமான தோல் என்ற அர்த்தத்திலும், பாவனை மிகுதியால் நன்கு பழுதடைந்த நிலை என்ற அர்த்தத்திலும், விபூதிக் குறியைக் குறிப்பது என்று பல அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது.

"அந்தக் காலத்தில பட்டையால தண்ணியள்ளி வளர்த்த தென்னையள் தான் இப்ப காய்ச்சுக் குலுங்குது"

"இப்பவெல்லோ மோட்டரால இறைக்கிறார்கள். அப்பவெல்லாம் பட்டையாலதான் அள்ளி இறைக் கிறனாங்கள்..."

இவற்றில் வரும் பட்டை என்கிற சொல் நீர் அள்ளும் பொருள் என்று அர்த்தம் கொள்கிறது.

"வேப்பம் பட்டை வெட்டி அவிச்சுக் குடிச்சா பூச்சி இல்லாமல் போகும்"

"முன்பெல்லாம் ஏற்பூசி போடுவதில்லை. நாங் கள் மரமஞ்சள் பட்டைதான் அவிச்சுக் குடிக்கிற னாங்கள்"

இவற்றில் வரும் பட்டை என்கிற சொல் மரத் தின் கடினமான மேற்பகுதித் தோலைக் குறிக்கிறது.

"அந்தக் கார் நல்லா பட்டை அடிச்சுப்போட்டுது"


"அவங்கட கையில போன அவ்வளவுதான். வாகனத்தை நல்லாப் பட்டையடிப்பாங்கள்"

இதில் வரும் பட்டை என்பது அதிக பாவனை அல்லது பாவனை மிகுதியால் பழுதாக்குவது என் பதைக் குறிக்கிறது.

"அவர் எப்பவும் நெத்தியில பட்டையடித்தி ருப்பார்"

இதில் வரும் பட்டை என்பது நெற்றியில் திரு நீற்றுக் குறிகள் இட்டிருப்பதைக் குறிக்கிறது.

இரண்டாம் அத்தியாயம்




04

# மகாவம்சம் கூறுவது என்ன...?

மகாவம்சம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு வரலாற்று நூலாகக் கொள்ளப்படுகிறது. கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாநாமர் என்கிற பிக்குவால் பாளிமொழியில் எழுதப்பட்டது. இது கி.மு 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான பத்து நூற்றாண்டுகால வரலாறு பற்றிக் குறிப்பிடுகிறது. ஐ.நாவின் யுனெஸ்கோ இவ்வாண்டு வெளியிட்ட அறிக்கையில் பழமையான ஆவணமாக இந்த நூலை ஏற்றிருக்கிறது. அந்த மகாவம்சம் என்ற நூலில் என்னவெல்லாம் கூறப்பட்டிருக்கிறது என்பதைச் செம்மண் வாசகர்களுக்கு இந்தப் பகுதியில் வாசிக்கத் தருகிறோம்.

**மகா சம்மத வம்சம்**

மகா சம்மதன் என்ற மன்னருடைய வம்சத்திலே உதித்தவர் மகா முனிவர். இந்த யுகத் தொடக்கத்தில் மகா சம்மதன் என்றொரு மன்னர் இருந்தார்.

ரோஜா, வரரோஜர்களுக்கும் இரு கல்யாணகர்களும் (கல்யாண, வரகல்யாண) உபோசதரும், இரு மாந்தாதர் மற்றும் இருவரான சரகா, உபசரா, சேதிய, முகால, மகா முகால, முகாலிந்த, சாகரவும், சகரதேவன் என்ற பெயருடையவனும், பரத, அங்கீரஸ, ருஸி, சுருஸியும், பதாபனும், மகா பதாபனும், அவர்களைப் போலவே பநாத, மகா பநாதனும், சுதாஸன, மகா சுதாஸன, நேரு, மகா நேரு, அஸிமாவும் இந்த இருபத்தெட்டுப் பேர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பேரர்களும் ஆவர். இவர்கள் அளவு கடந்;த காலம் குஸாவதி (பின்னர் குஸிநகரம் ஆயிற்று. ராஜக்ரகம் இப்போது ராஜ்கீர் எனப்படுகிறது. மகத நாட்டின் தலைநகர். மிதிலை - விதேக நாட்டின் தலைநகர்), ராஜக்ரகம், மிதிலை ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து நூறு அரசர்கள் இருந்தனர். பிறகு ஐம்பத்தாறு பேரும் அதன் பின் அறுபது பேரும், பின்னர் எண்பத்து நாலாயிரம் பேரும் பிறகு முப்பத்தாறும், முப்பத்திரண்டும் இருபத்தெட்டும் மேலும் இருபத்தெட்டும் பதினெட்டும் பதினேழும் பிறகு பதினைந்தும் பதினான்கும் ஒன்பதும் ஏழும் பனிரெண்டும் மேலும் இருபத்தைந்தும் மீண்டும் இருபத்தைந்தும் பனிரெண்டும் மீண்டும் பனிரெண்டும் ஒன்பதும் மகா தேவனிலிருந்து தொடங்கி எண்பத்து நாலாயிரமும், கலாராஜ நாகனிலிருந்து தொடங்கி எண்பத்து நாலாயிரமும், ஒக்காகா வரை பதினாறு பேர்களும் (விஜிதசேனன்,

தர்மசேனன், நாகசேனன், சம்மதன், திசம்பதி, ரேணு, குசன், மகா குசன், நவரதன், தசரதன், ராமன், பிலாரதன், சித்ரதரிசி, அத்ததரிசி, சுஜாதா, ஒக்காகா) - இவர்கள் யாவரும் மகா சம்மதன் வழி வந்தவர்கள். ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த இவர்கள் முறையான வரிசைப்படி அவரவர்களுக்குரிய தலைநகரில் இருந்து ஆண்டு வந்தனர்.

ஒக்காகாவுடைய மூத்த மகன் ஒக்கா முகன் ஆவான், நிபுண, சந்திமா, சந்தா முகா, சிவி சம்ஜய, பேரரசன் வெஸந்தர, ஜாலி, சீகவாஹன, சீகாஸர ஆகியவர்கள் இவர்களுடைய பிள்ளைகளும் பேரர்களும் ஆவர்.

சீகாஸரனுடைய பிள்ளைகளும் பேரர்களும் எண்பத்திரண்டாயிரம் பேர்கள் ஆவர். இவர்களில் கடைசி அரசன் ஜயசேனன்.

இவர்கள் கபிலவஸ்துவையாண்ட சாக்கிய மன்னர்கள் எனப்பட்டனர். சீஹஹானு என்பவன் ஜெயசேனனுடைய மகன்.

ஜயசேனனுடைய மகளுக்கு யசோதரா என்று பெயர். தேவதஹா என்ற இடத்தில் தேவதஹ சாகன் என்றொரு இளவரசன் இருந்தான்.

அஞ்சனா, காஞ்சனா ஆகிய இருவரும் அவனுடைய மக்கள், காஞ்சனா சீஹஹானுவின் முதல் பட்டமகிஷியாவள்.

சாக்க அஞ்சனாவுடைய ராணி யசோதரா ஆவாள், அஞ்சனாவுக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். மாயா, பஜாபதி என்பது அவர்களுடைய பெயர்கள். தண்டபாணி, சாக்கிய சுபபுத்தன் என்ற இரு புதல்வர்களும் இருந்தனர். ஆனால், சீஹஹானுவுக்கு ஐந்து பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருந்தனர். சுத்தோதனன், தோதோனன், சக்கோதனன், சுக்கோதனன், அமிதோதனன் ஆகியவை ஐந்து பிள்ளைகளின் பெயர். அமிதா, பமிதா என்பவை இரு பெண்களின் பெயர்.

சக்கா சுபா புத்தனுடைய பட்டத்து ராணி அமிதா. அவளுக்கு பத்ர காஞ்சனா, தேவதத்தன் என்று இரண்டு குழந்தைகள்.

மாயா, பிரஜாபதி ஆகிய இருவரும் சுத்தோதனுடைய ராணிகளாவர். சுத்தோதனுக்கும் மாயாவுக்கும் பிறந்தவர் தான் நமது பகவன். மகா சம்மதனுடைய வம்சத்தில்- இப்படித் தொடர்ந்து இடையறாது வந்த வம்சத்தில் நம்முடைய மகாஞானியும் தோன்றினார். அவர் உயர்ந்த குலத்துக்குத் தலைவராகவும் விளங்குபவர்.

போதிசத்துவராகிய இளவரசர் சித்தார்த்தருடைய ராணி பத்ர காஞ்சனா. அவர்கள் மகன் ராகுலன்.

பிம்பிசாரனும் இளவரசர் சித்தார்த்தரும் நண்பர்கள். அவர்களைப்போலவே இருவருடைய தந்தையர்களும் நண்பர்களாக இருந்தனர். போதிசத்துவர் பிம்பிசாரனை விட ஐந்து வயது மூத்தவர். தந்தையின் வீட்டை விட்டுச் சென்றபோது அவருக்கு இருபத்தொன்பது வயது. ஆறு வருடகாலம் முயன்று அதன் பின் ஞானம் அடைந்ததும் அவரது முப்பத்தைந்து வயதில் பிம்பிசாரனைக் காணச் சென்றார். தந்தையால் முடி சூட்டப்பட்டபோது ஒழுக்க சீலனான பிம்பிசாரனுக்குப் பதினைந்து வயது ஆகியிருந்தது. அவன் பட்டமேற்றுப் பதினாறு வருடங்கள் கழிந்தபின்பு புத்தர் தமது மார்க்கத்தைப் போதித்தார்.

52வருடகாலம் அவன் அரசாண்டான். புத்தரைச் சந்திக்கு முன்பு அவன் ஆட்சியில் 15ஆண்டுகள் கழிந்து விட்டன. பின்னர் 37 ஆண்டுகள் அவன் ஆட்சி செய்தான். பிம்பிசாரனுடைய மகன் அறிவிலி அஜாதசத்ரு. அத்துரோகி தன் தந்தையைக் கொன்றுவிட்டுப் பட்டத்துக்கு வந்து 32வருடம் ஆட்சி செய்தான்.

அஜாதசத்ரு ஆட்சிக்கு வந்த எட்டாவது வருடம் புத்தர் நிர்வாணமடைந்தார். அதன் பின்னர் அவன் இருபத்து நான்கு வருடகாலம் ஆட்சி செய்தான். ஒழுக்கத்தின் உயர் நிலையை எட்டிவிடப் புத்தர் நிலையாமையின் சக்திக்கு அடி பணிந்தார். நிலையாமையைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பவர்கள் துயரத்திலிருந்து விடுபடுவார்கள்.

(மகாவம்சத்தில் இரண்டாவது அத்தியாயமான மகா சம்மத வம்சம் முற்றும்)

**இரண்டாம் அத்தியாயம்**
**மகா சம்மத வம்சம்**


மகா சம்மதன் என்ற மன்னருடைய வம்சத்திலே உதித்தவர் மகா முனிவர். இந்த யுகத் தொடக்கத்தில் மகா சம்மதன் என்றொரு மன்னர் இருந்தார்.

ரோஜா, வரரோஜர்களுக்கும் இரு கல்யாணகர்களும் (கல்யாண, வரகல்யாண) உபோசதரும், இரு மாந்தாதர் மற்றும் இருவரான சரகா, உபசரா, சேதிய, முகால, மகா முகால, முகாலிந்த, சாகரவும், சகரதேவன் என்ற பெயருடையவனும், பரத, அங்கீரஸ, ருஸி, சுருஸியும், பதாபனும், மகா பதாபனும், அவர்களைப் போலவே பநாத, மகா பநாதனும், சுதாஸன, மகா சுதாஸன, நேரு, மகா நேரு, அஸிமாவும் இந்த இருபத்தெட்டுப் பேர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் பேரர்களும் ஆவர். இவர்கள் அளவு கடந்த காலம் குஸாவதி (பின்னர் குஸி நகரம் ஆயிற்று. ராஜக்ரகம் இப்போது ராஜ்கீர் எனப்படுகிறது. மகத நாட்டின் தலைநகர். மிதிலை - விதேக நாட்டின் தலைநகர்), ராஜக்ரகம், மிதிலை ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து நூறு அரசர்கள் இருந்தனர். பிறகு ஐம்பத்தாறு பேரும் அதன் பின் அறுபது பேரும், பின்னர் எண்பத்து நாலாயிரம் பேரும் பிறகு முப்பத்தாறும், முப்பத்தியிரண்டும் இருபத்தெட்டும் மேலும் இருபத்தெட்டும் பதினெட்டும் பதினேழும் பிறகு பதினைந்தும் பதினான்கும் ஒன்பதும் ஏழும் பனிரெண்டும் மேலும் இருபத்தைந்தும் மீண்டும் இருபத்தைந்தும் பனிரெண்டும் மீண்டும் பனிரெண்டும் ஒன்பதும் மகா தேவனிலிருந்து தொடங்கி எண்பத்து நாலாயிரமும், கலாராஜ நாகனிலிருந்து தொடங்கி எண்பத்து நாலாயிரமும், ஒக்காகா வரை பதினாறு பேர்களும் (விஜிதசேனன், தர்மசேனன், நாகசேனன், சம்மதன், திசம்பதி, ரேணு, குசன், மகா குசன், நவரதன், தசரதன், ராமன், பிலாரதன், சித்ரதரிசி, அத்ததரிசி, சுஜாதா, ஒக்காகா) - இவர்கள் யாவரும் மகா சம்மதன் வழி வந்தவர்கள். ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த இவர்கள் முறையான வரிசைப்படி அவரவர்களுக்குரிய தலைநகரில் இருந்து ஆண்டு வந்தனர்.

ஒக்காகாவுடைய மூத்த மகன் ஒக்கா முகன் ஆவான், நிபுண, சந்திமா, சந்தா முகா, சிவி சம்ஜய, பேரரசன் வெஸந்தர, ஜாலி, சீகவாஹன, சீகாஸர ஆகியவர்கள் இவர்களுடைய பிள்ளைகளும் பேரர்களும் ஆவர்.

சீகாஸரனுடைய பிள்ளைகளும் பேரர்களும் எண்பத்திரண்டாயிரம் பேர்கள் ஆவர். இவர்களில் கடைசி அரசன் ஜயசேனன்.




# ஜெயிலர்

## ரஜினி ரசிகர்களுக்கு ஓ.கே...!

**கதை**

சிலை கடத்தும் கும்பல் ஒன்று கோயில் சிலைகளைத் திருடி வெளிநாடுகளுக்குக் கடத்தி வருகிறது. அதைத் தடுப்பதற்காகப் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறார் காவல்துறை அதிகாரியான அர்ஜுன் (வசந்த் ரவி). நேர்மையாக இருக்கும் அர்ஜுனைக் கடத்திக் கொல்கிறார் சிலை கடத்தல் கும்பலின் தலைவனான (விநாயகன்). இதனால் நிலைகுலைந்து போகும் அர்ஜுனின் தந்தையும், ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரியுமான முத்துவேல் பாண்டியன் (ரஜினி), தனது மகனுக்காக பழிவாங்கப் புறப்படுகிறார். பல கொலைகள், தேடுதல், சண்டைகளைக் கடந்து விநாயகனை அடையும் ரஜினியை வேறு ஒரு நெருக்கடிக்கு உள்ளாக்கி, அவரிடம் தனக்குத் தேவையான ஒரு வேலையைச் செய்ய சொல்கிறார் விநாயகன். அந்த வேலையை ரஜினி செய்து முடித்தாரா, இல்லையா? இறுதியில் என்ன ஆனது என்பதே படத்தின் மீதிக்கதை.

**பலம் - பலவீனம்**

படத்தின் ஆரம்பத்திலே சிலை திருடும் கும்பல், கொடூர வில்லன், அவரைப் பிடிப்பதற்கு அக்கறை காட்டும்

இவர்கள் கபிலவஸ்துவையாண்ட சாக்கிய மன்னர்கள் எனப்பட்டனர். சீஹஹானு என்பவன் ஜெயசேனனுடைய மகன்.

ஜயசேனனுடைய மகளுக்கு யசோதரா என்று பெயர். தேவதஹா என்ற இடத்தில் தேவதஹ சாகன் என்றொரு இளவரசன் இருந்தான்.

அஞ்சனா, காஞ்சனா ஆகிய இருவரும் அவனுடைய மக்கள், காஞ்சனா சீஹஹானுவின் முதல் பட்டமகிஷியாவள்.

சாக்க அஞ்சனாவுடைய ராணி யசோதரா ஆவாள், அஞ்சனாவுக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். மாயா, பஜாபதி என்பது அவர்களுடைய பெயர்கள். தண்டபாணி, சாக்கிய சுபபுத்தன் என்ற இரு புதல்வர்களும் இருந்தனர். ஆனால், சீஹஹானுவுக்கு ஐந்து பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருந்தனர். சுத்தோதனன், தோதோனன், சக்கோதனன், சுக்கோதனன், அமிதோதனன் ஆகியவை ஐந்து பிள்ளைகளின் பெயர். அமிதா, பமிதா என்பவை இரு பெண்களின் பெயர்.

சக்கா சுபா புத்தனுடைய பட்டத்து ராணி அமிதா. அவளுக்கு பத்ர காஞ்சனா, தேவதத்தன் என்று இரண்டு குழந்தைகள்.

மாயா, பிரஜாபதி ஆகிய இருவரும் சுத்தோதனுடைய ராணிகளாவர். சுத்தோதனுக்கும் மாயாவுக்கும் பிறந்தவர்தான் நமது பகவன். மகா சம்மதனுடைய வம்சத்தில்-இப்படித் தொடர்ந்து இடையறாது வந்த வம்சத்தில் நம்முடைய மகாஞானியும் தோன்றினார். அவர் உயர்ந்த குலத்துக்குத் தலைவராகவும் விளங்குபவர்.

போதிசத்துவராகிய இளவரசர் சித்தார்த்தருடைய ராணி பத்ர காஞ்சனா. அவர்கள் மகன் ராகுலன்.

பிம்பிசாரனும் இளவரசர் சித்தார்த்தரும் நண்பர்கள். அவர்களைப்போலவே இருவருடைய தந்தையர்களும் நண்பர்களாக இருந்தனர். போதிசத்துவர் பிம்பிசாரனைவிட ஐந்து வயது மூத்தவர். தந்தையின் வீட்டை விட்டுச் சென்றபோது அவருக்கு இருபத்தொன்பது வயது. ஆறு வருடகாலம் முயன்று அதன் பின் ஞானம் அடைந்ததும் அவரது முப்பத்தைந்து வயதில் பிம்பிசாரனைக் காணச் சென்றார். தந்தையால் முடி சூட்டப்பட்டபோது ஒழுக்கசீலனான பிம்பிசாரனுக்குப் பதினைந்து வயது ஆகியிருந்தது. அவன் பட்டமேற்றுப் பதினாறு வருடங்கள் கழிந்தபின்பு புத்தர் தமது மார்க்கத்தைப் போதித்தார்.


52வருடகாலம் அவன் அரசாண்டான். புத்தரைச் சந்திக்கு முன்பு அவன் ஆட்சியில் 15ஆண்டுகள் கழிந்துவிட்டன. பின்னர் 37 ஆண்டுகள் அவன் ஆட்சி செய்தான். பிம்பிசாரனுடைய மகன் அறிவிலி அஜாதசத்ரு. அத்துரோகி தன் தந்தையைக் கொன்றுவிட்டுப் பட்டத்துக்கு வந்து 32வருடம் ஆட்சி செய்தான்.

அஜாதசத்ரு ஆட்சிக்கு வந்த எட்டாவது வருடம் புத்தர் நிர்வாணமடைந்தார். அதன் பின்னர் அவன் இருபத்து நான்கு வருடகாலம் ஆட்சி செய்தான். ஒழுக்கத்தின் உயர் நிலையை எட்டிவிடப் புத்தர் நிலையாமையின் சக்திக்கு அடிபணிந்தார். நிலையாமையைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பவர்கள் துயரத்திலிருந்து விடுபடு வார்கள்.

(மகாவம்சத்தில் இரண்டாவது அத்தியாயமான மகாசம்மத வம்சம் முற்றும்)

காவல்துறை அதிகாரி என பரபரக்கிறது திரைக்கதை. மகன் கொலைக்குக் காரணமானவர்களை பழிவாங்க ஒவ்வொருவராகத் தந்தை தேடிக் கொல்லும் காட்சிகள் தரமான 'சம்பவங்கள்'.

படத்தின் முதல் பாதி முழுவதுமே இயக்குநர் நெல்சன் அதகளம் செய்திருக்கிறார். படத்தில் வரும் நகைச்சுவைக் காட்சிகள் நன்றாகக் கைகொடுத்திருக்கின்றன. படத்தின் இடைவேளைக் காட்சி 'திரை தீப்பிடிக்கும்' ரகம். ஒரு ரஜினி ரசிகனுக்கு என்ன தேவையோ அவை அனைத்தும் முதல் பாதியில் நிறைவாக உள்ளன. இடைவேளைக்கு முந்தைய காட்சி கிட்டத்தட்டப் பரபரப்புக் கட்சியாக அமைக்கப்படுவதால் அதற்கு பின்னால் வரும் காட்சிகளின் வீரியம் குறைந்து விடும் சாத்தியக்கூறுகள் அதிகம். இதில் 'ஜெயிலர்' படமும் தப்பவில்லை.



முதல் பாதியில் இருந்த விறுவிறுப்பும், சுவாரஸ்யமும் இரண்டாம் பாதியில் எழுதப்பட்ட 'வீக்' ஆன திரைக்கதையால் காணாமல் போய்விடுகின்றன. கூடவே முதல் பாதியில் காமெடிக்கு உதவிய யோகிபாபுவும் காணாமல் போய்விடுகிறார். அதுவரை பழிவாங்கும் கதையாகப் போய்க் கொண்டிருக்கும் கதை, திடீரென மாறுவது சுவாரஸ்யம் தரவில்லை. அதற்காக வைக்கப்பட்ட காட்சிகளும் ஏற்றுக் கொள்ளும்படி இல்லை. முதல் பாதியில் அதகளமாக ஆர்ப்பரிக்க வைத்த காட்சியமைப்புகள், இரண்டாம் பாதியில், பார்ப்போரை அமைதியாக்கி விடுகின்றன.

முதல் பாதியில் பெரிதாக தெரியாத லாஜிக் குறைகள், திரைக்கதையின் பலவீனத்தால் இரண்டாம் பாதியில் அப்பட்டமாகத் தெரிகின்றன. ஒரு உதவிக் காவல் அதிகாரி கொல்லப்படுவது என்பது சாதாரண விடயமா? ஆனால், படத்தில் குடும்பத்தினருக்கு தகவல் சொல்வதோடு காவல்துறையினரின் பணி முடிந்துவிடுகிறது. அதன் பிறகு ரஜினி இஷ்டத்துக்கு ஆட்களை போட்டுத் தள்ளுகிறார். தலையை ஒரே வீச்சில் துண்டிக்கிறார், தொண்டையில் கத்தியை இறக்குகிறார், சினைப்பர் மூலம் சுட்டுத் தள்ளுகிறார். ஆனால் படத்தில் அதையெல்லாம் காவல்துறையினர் கண்டுகொள்வதே இல்லை.

15 ஆண்டுகளுக்கு முன்பு திகார் சிறையில் ஜெயிலர் ஆக ரஜினி இருந்ததாக காட்டுகிறார்கள். அதற்காக அவருக்கு இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ரவுடி எல்லாம் உதவுவதாகக் காட்சிகள் வைத்திருப்பது நெருடல். எனினும், அந்த ஃப்ளாஷ்பேக் காட்சியும், அதில் 'டீ-ஏஜிங்' தொழில்நுட்பம் மூலம் ரஜினியை 'சிவாஜி' பட தோற்றத்தில் கொண்டு வந்திருப்பது சிறப்பு.

**பாத்திரங்கள்**

ஆர்ப்பாட்டமில்லாமல் சாதுவான குடும்பத் தலைவராக அறிமுகம் ரஜினி கவர்கிறார். எந்தவித பஞ்ச் டயலாக்கோ, ஓபனிங் பாடலோ இல்லாமல் மகனுக்கும் பேரனுக்கும் காலணி துடைத்துக் கொடுக்கும் காட்சிகளில் நெகிழ வைக்கிறார். சாதுவான முத்துவாக இருக்கும் ரஜினி, 'டைகர்'



முத்துவேல் பாண்டியனாக மாற்றம் அடையும்போது அரங்கம் ஆர்ப்பரிக்கிறது. இங்கு தொடங்கும் ரஜினியின் ராஜ்ஜியம் படத்தின் கிளைமாக்ஸ் வரை எங்கும் தொய்வடையவில்லை. எந்தப் படங்களிலும் இல்லாத வகையில் பல இடங்களின் தனது சுயம் மற்றும் நாயக பிம்பம் பற்றிக் கவலைப்படாமல் நடித்துள்ளார். குறிப்பாக, யோகிபாபு உடனான காட்சிகளில் ரஜினியை வைத்து அவர் அடிக்கும் கவுன்ட்டர்களை மற்ற பெரிய நடிகர்கள் ஒப்புக் கொள்வார்களா என்பது கூட சந்தேகமே. யோகிபாபுவும் ரஜினியும் சேர்ந்து வரும் கட்டளைக்கு இணங்கி ரம்யா கிருஷ்ணனிடம் பிச்சை எடுக்கும் காட்சிகளில் பவ்யம் காட்டியும் அப்ளாஸ் பெறுகிறார். ரம்யா கிருஷ்ணன், மிர்னா ஆகியோருக்கான காட்சிகள் குறைவு. ரஜினியின் பேரனாக வரும் மாஸ்டர் ரித்விக் சிறப்பாக நடித்துள்ளார். வசந்த் ரவி முகத்தில் எந்தவொரு உணர்வையும் காட்டாமல் வந்து செல்கிறார். மற்ற நெல்சன் படங்களில் நகைச்சுவை காட்சிகளில் பலம் சேர்க்கும் ரெடின் கிங்ஸ்லி இதில் அடக்கி வாசித்திருக்கிறார்.



காட்சிகளில் தியேட்டர் முழுவதும் சிரிப்பலை.

படத்தில் இந்தி நடிகர் ஜாக்கி ஷெராஃப், கன்னட நடிகர் சிவராஜ் குமார், மலையாள நடிகர் மோகன்லால், தெலுங்கு நடிகர் சுனில் ஆகியோர் சிறப்பு தோற்றத்தில் நடித்திருப்பது படத்தின் விளம்பரத்துக்கு மட்டுமே உதவியுள்ளதே தவிர கதைக்கு கிஞ்சித்தும் உதவவில்லை. க்ளைமாக்ஸில் ஆளுக்கு ஒரு ஸ்லோமோஷன் காட்சிகளைத் தவிர, 'காவாலா' பாடலுக்காக மட்டுமே தமன்னா பயன்படுத்தப்பட்டுள்ளார். சுனில், தமன்னா வரும் காட்சிகள் போரிங் ரகம். அந்தக் காட்சிகளை நீக்கியிருந்தாலே இரண்டாம் பாதி சிறப்பாக வந்திருக்க சாத்தியங்கள் உள்ளன.

ரஜினிக்கு அடுத்து படத்தில் கவனம் ஈர்ப்பவர் வில்லனாக வரும் விநாயகன். ஆசிட் நிரம்பிய தொட்டிகளில் ஆட்களைக் கொல்லும்போதும், ரஜினியின் இசை, பாடல், ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு.... தொழில்நுட்ப ரீதியில் குறை சொல்ல எதுவும் இல்லை. அனிருத்தின் இசையில் பாடல்கள் அனைத்தும் ஏற்கெனவே பிரபல்யம். படத்தில் பாடல்களைத் தாண்டி பின்னணி இசையிலும் ஸ்கோர் செய்துள்ளார். விஜய் கார்த்திக் கண்ணனின் ஒளிப்பதிவு கச்சிதம்.

முன்பே குறிப்பிட்டதைப் போல முதல் பாதியில் சிறப்பான காட்சியமைப்புடன், மினி க்ளைமாக்ஸ் போன்ற ஒரு இடைவேளை இரண்டாம் பாதியின் வீரியம் குறைந்துவிடுகிறது. முதல் பாதியின் விறுவிறுப்புக்கு ஏற்ப இரண்டாம் பாதியை சீராக்கி, தேவைவற்ற காட்சிகளை கத்தரித்திருந்தால் ரஜினி - நெல்சன் இருவருக்குமே ஒரு நிறைவானதாக இந்தப் படம் இருந்திருக்கும்.

# ஏன்...?

# அப்படி...?

நட்சத்திரா

58



## கப்பல் வாழை இரகசியம் தெரியுமா...?

நம்மவர் மத்தியில் புழக்கத்திலுள்ள வாழை இனங்களில் கப்பல் வாழையும் ஒன்று. ஏன் இதைக் கப்பல் வாழை என்கிறார்கள்? கப்பல் வாழை என்கிற பெயர் இதற்கு எப்படி வந்தது? கப்பலுக்கும் வாழைக்கும் என்ன தொடர்பு...? என்று சிந்திக்கத் தோன்றும் விதத்தில் இதன் பெயர் அமைந்தாலும் இது குறித்து யாரும் தேடுவதில்லை.

நாம் இப்போது கப்பல் வாழை என்று அழைக்கின்ற இந்த வாழை இனத்தை, ஒல்லாந்தர் இலங்கையை நிர்வகித்த காலத்தில் இந்தியாவின் கோழிக்கூடு என்ற பகுதியிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டுவந்து இலங்கையில் பயிரிட்டார்கள். பயிரிட்ட அந்த வாழைகளில் இருந்து கிடைத்த வாழைக்குலைகளைப் பின்னர் கப்பலில் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட வாழை இனம் கப்பலில் கொண்டு வரப்பட்டது என்பதாலும் அதன் குலைகளைக் கப்பலில் ஏற்றுமதி செய்துகொண்டு சென்றதாலும் கப்பல் வாழை என்ற பெயரைப் பெற்றது.

இந்தக் கப்பல் வாழை இனத்தைச் சிங்கள மக்கள் "கோழிக்கூட்டு" வாழை என்று அழைக்கின்றனர். கப்பலில் கொண்டு வரப்பட்டது என்ற அர்த்தத்தில் தமிழர்கள் இதைக் கப்பல் வாழை என்று அழைக்க அது இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டதோ அதன் பெயரால் சிங்கள மக்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறாகத் தமிழரால் கப்பல் வாழை என்று அழைக்கப்படுவதும் சிங்கள மக்களால் கோழிக்கொட்டு என அழைக்கப்படுவதும் ஒரே வாழை இனமே.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781